புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

● மலர்: 01 ● இதழ்: 265 ● 31-03-2026 ● செவ்வாய் ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி
● Volum 01 ● Issue: 265 ● 31-03-2026 ● Tuesday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry

## கேரளாவில் பாஜ ஆட்சியமைத்தால் முந்தைய அரசுகளின் ஊழல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருவோம்

### பாலக்காட்டில் பிரதமர் மோடி பேச்சு



திருவனந்தபுரம்: மார்ச்.31–

கேரள மாநில சட்டப் பேரவை தேர்தலை முன்னிட்டு பிரதமர் மோடி நேற்று பாலக்காடு மற்றும் திருச்சூரில் பாஜ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார். நேற்று மதியம் பாலக்காடு கோட்டை மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: கேரளாவில் இம்முறை ஒரு மாற்றம் ஏற்படப்போவது உறுதி. இந்த மாநிலத்தில் நம்முடைய எத்தனையோ தொண்டர்கள் அரசியல் தாக்குதல்களில் தங்களது உயிரை இழந்துள்ளனர். அவர்களுக்கு நான் என்னுடைய மரியாதையை செலுத்துகிறேன்.அரசியல் விவாதம்

வேலையில்லாத காரணத்தால் கேரளாவில் இருந்து பெருமளவு இளைஞர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். கடந்த 10 வருடங்களாக இங்கு ஆட்சி செய்யும் அரசு இளைஞர்களுக்கு எந்தத் தொழில் வாய்ப்புகளையும் உருவாக்கவில்லை. காங்கிரசும், கம்யூனிஸ்டும் எங்கெல்லாம் ஆட்சி செய்ததோ அங்கெல்லாம் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இவர்களுடைய சக்கர வியூகத்தில் கேரளாவும் சிக்கிவிட்டது. கண்டிப்பாக கேரளாவில் பாஜ கூட்டணி ஆட்சியமைக்கும். இங்கு ஆட்சிக்கு வந்தால் இதுவரை காங்கிரஸ், கம்யூனிஸ்ட் அரசுகள் செய்த ஊழல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

காங்கிரஸ் பாஜவின் பிடீம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறுகின்றனர். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பாஜகவின் பி டீம் என்று காங்கிரஸ் கூறுகிறது. ஆனால் உண்மையில் கேரளாவில் ஏ டீமாக செயல்படுவது பாஜ மட்டும் தான் என்று அவர்கள் இருவரும் சம்மதிக்கின்றனர். காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கூட்டணியினர் பாஜவை மட்டும் தான் குறி வைக்கின்றனர். அவர்கள் இருவரும் பாஜவை பார்த்து மட்டும் தான் பயப்படுகின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

இதன் பிறகு திருச்சூர் சென்ற பிரதமர் மோடி அங்கு நடந்த ரோடு ஷோவில் கலந்துகொண்டார்.

## “திமுக கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும்” :மு.க.ஸ்டாலின் நம்பிக்கை



சென்னை: மார்ச்.31–

“தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்னர் திமுக கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளது” என திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கியது. அதன்படி, கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று மனுத்தாக்கல் செய்தார். அவருடன் அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் இருந்தனர். கொளத்தூர் தொகுதியில் தொடர்ந்து 4 வது முறையாக ஸ்டாலின் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “கொளத்தூர் தொகுதியில் கடந்த 3 முறை இருந்ததைவிட அதிகளவிலான ஆதரவை இப்போது கண்கூடாகப் பார்க்கிறேன். நேற்று தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பிறகு திமுக கூட்டணி 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

திமுக மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். எனவே எங்களுக்கு பெரிய அளவில் ஆதரவு கிடைத்திருக்கிறது. இம்முறை அமோகமான வாக்கு வித்தியாசத்தில் நான்காவது முறையாகவும் கொளத்தூர் மக்கள் என்னை வெற்றி பெற வைப்பார்கள். தமிழகம் முழுவதும் எங்கள் பிரச்சாரம் எப்போதும் போல வலுவாக இருக்கும்” என்றார்.

கொளத்தூர் தொகுதியில் திமுக தலைவர் ஸ்டாலின், அதிமுக சார்பில் சந்தான கிருஷ்ணன், நாதக சார்பில் சவுந்திர பாண்டியன், தவெக சார்பில் வி.எஸ்.பாபு ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் 2011ம் ஆண்டு முதல் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிமுக– திமுக இடையேதான் போட்டி – ராஜேந்திரபாலாஜி.

சிவகாசி, மார்ச்.31–

அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி சிவகாசியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:...

நான்கு முனை இல்லை நாற்பது முனை போட்டி இருந்தாலும் களத்தில் திமுகவுக்கும் தவெகவுக்கும் இடையே தான் போட்டி என்று நேற்று வேட்பாளர் பட்டியல் அறிவிப்பின் போது விஜய் பேசியது குறித்து செய்தியாளர்கள் ராஜேந்திரபாலாஜியிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு சின்ன குழந்தைகள் போல விவரம் தெரியாமல் பேசிவருகிறார். நாட்டில் என்ன நடக்கிறது என்பது கூட தெரியாமல் இருக்கிறார். விஜயின் வார்த்தைகளில் விளையாட்டுத்தனம் தான் இருக்கிறது. சினிமாவில் வேண்டுமானால் காமெடியனாக, ஆக்‌ஷன் நடிகராக நடிக்கலாம் .ஆனால் அரசியலில் அவரது நடிப்பு எடுபடாது. விஜயின்

(தொடர்ச்சி 2ம்பக்கம்.....

## ரேஷன் கடைகள், பெட்ரோல் பங்க்குகள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம்: மத்திய அரசு அனுமதி

புதுடெல்லி: மார்ச்.31–

எல்பிஜி தட்டுப்பாட்டை சமாளிக்கும் நடவடிக்கையாக, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 21 மாநிலங்களில் வீட்டுப் பயன்பாட்டிற்காக மண்ணெண்ணெய்யை மத்திய அரசு தற்காலிகமாக ஒதுக்கியுள்ளது. மேலும், பெட்ரோல் விற்பனை நிலையங்கள் மூலமும் மண்ணெண்ணெய் விற்பனை செய்யவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 29 அன்று வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பின்படி, மத்திய அரசு பெட்ரோலியப் பாதுகாப்பு மற்றும் உரிம விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது. இதன் மூலம், மண்ணெண்ணெய் பயன்பாடு இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்ட டெல்லி, ஹரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட 21 மாநிலங்களில் பொது விநியோகத் திட்டம் மூலமாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி, அரசால் நியமிக்கப்படும் பெட்ரோல் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்க அனுமதிக்கப்படும். இதன்படி ஒவ்வொரு பெட்ரோல் விற்பனை நிலையமும் 5,000 லிட்டர் வரை மண்ணெண்ணெயை இருப்பு வைக்கலாம். இதற்காக, மாநில அரசுகள் மூலம் ஒரு மாவட்டத்திற்கு அதிகபட்சம் இரண்டு பெட்ரோல் பங்குகள் நியமிக்கப்படும்.

தொடர்ந்து நிலவி வரும் உலகளாவிய நெருக்கடியால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், வீடுகளுக்கு அத்தியாவசிய எரிபொருள் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கெனவே உள்ள எரிபொருள் விநியோக வலையமைப்பின் மூலம் விரைவான விநியோகத்தை எளிதாக்கும் வகையில், தற்போதுள்ள பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மண்ணெண்ணெயை இருப்பு வைக்கவும் அனுமதிக்கப் பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இது 60 நாட்களுக்கு அல்லது மறு அறிவிப்பு வரும் வரை செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பாலக்காட்டில் தேர்தல் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம்

பாலக்காடு : மார்ச்.31–

கேரளாவில் பாலக்காடு மாவட்டம் உட்பட 14 மாவட்டங்களில் உள்ள மொத்தம் 140 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஏப்.9ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. இதனையொட்டி தேர்தல் ஆணைய ஊழியர்கள் மக்களிடையே தெருநாடங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும், மாணவ மாணவிகள் உறுதி எடுத்தவாறும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். பாலக்காடு அரசு அலு வலகங்கள் ஒருங்கிணைப்பு வளாகத்தில் தேர்தல் குறித்து விழிப்புணர்வு பலகை அமைக்கப் பட்டது. அதில் எனது ஓட்டு, எனது உரிமை என்ற வாக்கிய பலகையில் வாக்காளர்கள் தங்களது கையெழுத்துக்களை பதிவு செய்ய அமைக்கப்பட்டுள்ளன. முன்னதாக நேற்று மாவட்ட கலெக்டர் மாதவிக்குட்டி கையெழுத்திட்டு விழிப்புணர்வை மக்களிடையே தொடங்கி வைத்தார்.

ஒத்தப்பாலம் சப் கலெக்டர் அஜித்சிங்க, ஆர்டிஓ அன்வர் சாதது ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்களும் தங்களது விருப்பங்களை எழுதியவண்ணம் கையெழுத்திட்டு தேர்தலை வரவேற்றுள்ளனர்.

## சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் 9 போலீசாருக்கான தண்டனை விவரம் ஏப்ரல் 2ம் தேதி அறிவிக்கப்படும்: மதுரை மாவட்ட நீதிமன்றம்





மதுரை: மார்ச்.31–

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் 9 போலீசாருக்கான தண்டனை விவரம் ஏப்ரல் 2ம் தேதி அறிவிக்கப்படும் என்று மதுரை மாவட்ட நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ் (59). வியாபாரி. இவரது மகன் பென்னிக்ஸ் (31). இவர்கள் இருவரும் சாத்தான்குளம் பஜாரில் செல்போன் விற்பனை கடை வைத்திருந்தனர். கடந்த 19.6.2020ல் அதிமுக ஆட்சி காலத்தில், கொரோனா ஊரடங்கு அமலில் இருந்தது. அப்போது இரவில் நீண்ட நேரம் கடையை திறந்து வைத்திருந்ததாக, சாத்தான் குளம் போலீசார் தந்தை, மகன் இருவரையும் விசாரணைக்காக காவல்நிலையம் அழைத்துச் சென்றனர். அன்றிரவு போலீசார் விசாரணையில் இருவரையும் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த தந்தை, மகன் இருவரும் மறுநாள் கோவில்பட்டி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டு உயிரிழந்தனர். இதுதொடர்பாக கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையம் சந்தேக மரணமாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியது. பின்னர் ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவின் பேரில், கடந்த 29.6.2020ல் வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது.

சிபிஐ போலீசார் கொலை வழக்காக பதிவு செய்து அப்போதைய சாத்தான்குளம் காவல்நிலைய இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், எஸ்ஐக்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ். சிறப்பு எஸ்ஐ பால்துரை, போலீஸ்காரர்கள் முருகன், முத்துராஜ், சாமதுரை, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 10 பேரை கைது செய்து, மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். விசாரணையின் போது பால்துரை இறந்தார். இதனால் மற்ற 9 பேர் மீதான வழக்கின் விசாரணை மதுரை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்தது. இந்த வழக்கில் பெண் போலீஸ்காரர்கள் பியூலா, ரேவதி மற்றும் எஸ்ஐ ரவிச்சந்திரன் ஆகியோரின் சாட்சியம் முக்கியமானதாக கருதப்பட்டது. 100க்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் சிபிஐ தரப்பில் முதற்கட்டமாக 2,027 பக்கங்கள், இரண்டாம் கட்டமாக 400 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கில் கைதானவர்கள் ஜாமீன் கோரி மதுரை மாவட்ட நீதிமன்றம், ஐகோர்ட், சுப்ரீம் கோர்ட் வரை சென்றனர். ஆனால், அனைத்தும் தள்ளுபடியாகின. இந்த வழக்கை இறுதியாக விசாரித்த நீதிபதி ஜி.முத்துக்குமரன், கடந்த மார்ச் 23ம் தேதி மாலை தீர்ப்பளித்தார்.

அதில், உயிரிழந்த தந்தை ஜெயராஜ், மகன் பென்னிக்ஸ் இருவர் மீதும் போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த வழக்கில் சிபிஐ தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகள் உண்மை என்பதை இந்த நீதிமன்றம் உறுதி செய்கிறது. இதன் மூலம் 9 பேரின் மீதான கொலை குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே 9 பேரும் கொலை குற்றவாளிகள் என தீர்மானிக்கப்படுகிறது. காவல்துறையைச் சேர்ந்த 9 பேருக்கும் தண்டனை விபரங்கள் வரும் 30ம் தேதி தெரிவிக்கப்படும் என கூறி ஒத்திவைத்திருந்தார்.

இதையடுத்து குற்றம் சாட்டப்பட்ட போலீஸ்காரர்கள் அனைவருக்கும் மதுரை அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம் மன நல பரிசோதனை செய்யப்பட்டது. இந்நிலையில், மதுரை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இன்று காலை இந்த வழக்கை எடுத்த நீதிபதி ஜி.முத்துக்குமரன், ‘9 போலீஸ்காரர்களின் தண்டனை விபரம் பிற்பகலில் அறிவிக்கப்படும்’ என்று தெரிவித்தார்.

தற்போது 9 போலீஸ்காரர்களின் தண்டனை விபரம் ஏப்ரல் 2ம் தேதி அறிவிக்கப்படும் என்று வழக்கை ஒத்திவைத்து. போலீசாரின் முந்தைய நடத்தை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப் பட்டிருந்தது. ஒன்றிய, மாநில அரசுகள் அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் கோரப் பட்டதால் தாமதம். அறிக்கை தாக்கல் செய்தபின் தண்டனை விபரம் அறிவிக்கப்படும். சாத்தான் குளம் வழக்கில் குற்றவாளி களுக்கு தண்டனை அறிவிப்பு இன்னும் தாமதமாகலாம் எனத் தகவல். சாத்தான்குளம் வழக்கில் ஏப்.2ம் தேதி தண்டனை விபரம் அறிவிக்கப்படும் என்று கூறி ஒத்திவைத்து மதுரை மாவட்ட நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது.

# அரியலூர்... நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வேட்புமனுத் தாக்கல்...



அரியலூர். மார்ச்.31–

தமிழகத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு நாம் தமிழர் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள புகழேந்தி தனது வேட்பு மனுவை அரியலூர் கோட்டாட்சியரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான த.பிரேமியிடம் தாக்கல் செய்தார்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி நடைபெறுகிறது. அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை அறிவித்து நேற்று தமிழக முழுவதும் வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது. அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு அரியலூர் கோட்டாட்சியர் த. பிரேமி தேர்தல் நடத்தும் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் புகழேந்தி இன்று வேட்புமனுவை தாக்கல் செய்தார். பின்னர் உறுதி மொழி எடுத்துக்கொண்டார்.

நாம் தமிழர் கட்சியின் அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக போட்டியிடும் தே.புகழேந்தி, அரியலூர் மாவட்டம், கீழக்காங்கியனூர் கிராமத்தை சேர்ந்தவர். இளம் வேட்பாளரான இவர் தொழிற்கல்வி முடித்திருக்கிறார். தற்போது தொழில் முனைவோராகவும் இருக்கிறார்.

இவர் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் ஆவார். 2016 ஆம் ஆண்டு முதல் நாம் தமிழர் கட்சியில் பயணித்து வருகிறார். 2022ஆம் ஆண்டு முதல் நாம் தமிழர் கட்சியின் உழவர் பாசறையினுடைய மாநில செய்தித் தொடர்பாளராகச் செயல்பட்டு வருகிறார். நாம் தமிழர் கட்சியின் மாநில நிர்வாகக் குழுவிலும் உறுப்பினராக இருக்கிறார்.

# திமுக வேட்பாளர் அறிவிப்பை தொடர்ந்து பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் பேரறிஞர் அண்ணா சிலை காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை







இந்தியாவே எதிர்நோக்கும் 2026 தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் 2 வது முறையாக பர்கூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழகத்திற்கும் நன்றியை தெரிவிக்கும் வகையில், பர்கூர் திருப்பத்தூர் Xரோடு அருகில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு நமக்கு சிறப்பான வரவேற்பு அளித்து, மேலும் பிடிஓ அலுவலகம் அருகில் உள்ள மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவ சிலைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க உதய சூரியனின் ஒளி ஒவ்வொரு வீட்டிலும் ஒளிரட்டும்..!

ஸ்டாலின் _ தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்

வெல்வோம் ஒன்றாக

வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு

நமது கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்புடன் தொகுதி மக்களின் பேராதரவுடன் மாபெரும் வெற்றி பெற்று, அதனை நம் தலைவர் அவர்களின் கரங்களில் ஒப்படைப்போம்

என்று பொது கூட்டத்தில் பேசினார்.

உடன் கட்சி தொண்டர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# செஞ்சியில் காங்கிரஸ் சார்பில் சோனியா காந்தி உடல் நலம் பெற வேண்டி சிறப்பு வழிபாடு



செஞ்சி மார்ச் 31

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பொன்பத்தி ஏரிக்கரையில் அமைந்துள்ள அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயத்தில் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அகில இந்திய முன்னாள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவர்கள் விரைவில் பூரண நலம் பெற வேண்டி செஞ்சி வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் சக்திவேல் ஏற்பாட்டில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் சூரியமூர்த்தி தலைமை தாங்கினார்.

விவசாய பிரிவு மாவட்ட தலைவர் ஜோலதாஸ் சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் சையத் மாலிக் முன்னிலை வகித்தனர் .

நிகழ்ச்சியில் துர்க்கை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை காண்பிக்கப்பட்டு சிறப்பு வழிபாடு செய்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் நகரத் தலைவர் விஜயகுமார் முன்னாள் ஊடகப் பிரிவு தலைவர் ஷெரிப் மாநில பேச்சாளர் பொன்பத்தி சம்பத் சகிலா காங்கிரஸ் நிர்வாகிகள் முத்துலட்சுமி, பர்வீன். சென்னாளூர் பரமசிவம், சிட்டாம் பூண்டி பரமசிவம்,கேப்டன் முனுசாமி,செஞ்சி சேகர், ஹரி கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளின் தவெக வேட்பாளர்கள் அறிவிப்பு!



வருகிற சட்டமன்ற தேர்தலில் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அக்கட்சி தலைவர் விஜய் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அதன்படி,

1. கிருஷ்ணகிரி முகுந்த் ஆர் பாண்டியன்
2. பர்கூர் முரளிதரன்
3. தளி ஜி.சுரேஷ்
4. வேப்பனஹள்ளி சம்பங்கி
5. ஓசூர் எம்.அம்ரிஷ்
6. ஊத்தங்கரை (தனி) குமரவேல்

# அதிமுக- திமுக இடையேதான் போட்டி...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகளை அரசியல் ஆர்வலர்கள் வேடிக்கையாக பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.. ஒரு அரசியல்வாதியாக உருவாவதற்கு உரிய பேச்சாக அவரின் பேச்சுகள் அமையவில்லை. அதிமுகவுக்கும் திமுகவுக்கும் இடையே தான் போட்டி என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

அரசியலில் ஒரு ஜோக்கராக விஜயை பொதுமக்கள் பார்க்க ஆரம்பித்து விட்டனர். தன் மேல் நம்பிக்கை இல்லாமல் தான் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார். தன்னுடைய பெயரை தானே அறிவித்து கொள்கிறார். என்.டி.ஏ கூட்டணியின் துருவ நட்சத்திரமாக எடப்பாடியார் ஜொலிக்கிறார். வருகிற சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணி வெற்றி பெற்று இ.பி.எஸ் முதல் அமைச்சராக பதவியேற்பார்.

இவ்வாறு அவர் பேசியுள்ளார் .

# மண் கொள்ளை.

வேலூர் ஒன்றியம் குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பழவேரி ஏரியில் திமுக ஆதரவாளர்கள் போலியான பர்மிட் வைத்து கொண்டு இரவு பகலும் லாரிகளில் மண் கொள்ளை நடக்கிறது.ஏரியில் அளவைவிட அளவுக்கு அதிகமான பள்ளம் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால த்தில் சுற்றுவட்டார பகுதிகளில் தண்ணீர் பஞ்சம் ஏற்படுமேயானால் சம்பந்தபட்ட அதிகாரிகளே முழுபொறுப்பேற்க வேண்டும். உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என பேசப்படும் தகவல் இத்தகவல் உண்மை தன்மை விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா ?

# ரயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு :



திருச்சி ,ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்திற்கும், டவுன் ஸ்டேஷன் ரயில் நிலையத்திற்கும் இடையே சுமார் 55 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் அவ்வழியே சென்ற ஏதோ ஒரு ரயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலே உடல் சிதறி இறந்துள்ளார். இறந்த நபர் பச்சை கலர் அரைக்கை சட்டையும், ஊதா மற்றும் கருப்பு நிறத்தில் கைலியும், வைகிங் பாக்கெட் வைத்த ஜட்டியும் அணிந்துள்ளார். இறந்த உடலை திருச்சி இருப்புப் பாதை காவல் உதவி ஆய்வாளர் சேவுகன் உடலை கைப்பற்றி திருச்சி அரசு பொது மருத்துவமனை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மணப்பாறை ரயில் நிலையத்திற்கும் கொளத்தூர் ரயில் நிலையத்திற்கும் இடையே சுமார் 45 வயது மதிக்கத்தக்க பெண் நபர் அவ்வழியே சென்ற ஏதோ ஒரு ரயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலே இறந்துள்ளார். மேற்படி இறந்தவர் உடலை கைப்பற்றி திருச்சி இருப்பு பாதை காவல் உதவி ஆய்வாளர் மகேஸ்வரன் திருச்சி அரசு பொது மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர் .

## தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்..

# ஈரோடு மேற்கு தொகுதியில் அமைச்சர் சு.முத்துசாமி தீவிர தேர்தல் பிரச்சாரம்



ஈரோடு. மார்ச். 31

சட்டமன்ற பொது தேர்தல் நடைபெறும் நிலையில், ஈரோடு மேற்கு தொகுதியில் அமைச்சர் முத்துசாமி நேற்று முதல் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளது. ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குப்பதிவும், மே நாலாம் தேதி அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெற இருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் திமுக கூட்டணி மற்றும் அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றி கழகம் என அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் களத்தில் தங்களுடைய வேட்பாளர்களை அறிவித்து தீவிர தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்திலுள்ள 8 சட்டமன்ற தொகுதிகளிலும் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து உள்ள நிலையில் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் சு முத்துசாமி திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் புடை சூழ நேற்று காலை 7:00 மணி முதல் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அதன்படி நேற்று காலை 7 மணி அளவில் தனது பிரச்சாரத்தை தொடங்கிய அமைச்சர் முத்துசாமி காரப்பாறை புது காலனி கீழ் திண்டல், மேல் திண்டல், வித்யா நகர், லட்சுமி கார்டன் பகுதியில் நேற்று காலை தனது பிரச்சாரத்தை மேற்கொண்டார். அப்போது அவருக்கு பொதுமக்கள் மற்றும் கட்சியினர் ஆராத்தி எடுத்து தங்களின் ஆதரவுகளை தெரிவித்தனர்.

இந்த தேர்தல் பிரச்சாரத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ பிரகாஷ், உள்ளிட்ட திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உடன் சென்றனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# அதிமுக சார்பில் வேட்பாளர் அறிவிப்பை தொடர்ந்து பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்.



கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கே.அசோக்குமார் அவர்களின் அதிமுக சார்பில் வேட்பாளர் அறிவிப்பை தொடர்ந்து நேற்று காவேரிப்பட்டிணம் பேரூராட்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார் அவர்களின் முன்னிலையில் பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டன.

தலைமை காவேரிப்பட்டிணம் நகரக் கழக செயலாளர் எம்.விமல் அவர்கள் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பையூர் ரவி அவர்கள் மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் பெருவலூர் கிராமத்தில் அமைந்துள்ள கோடீஸ்வரர் ஆலய தேர் திருவிழா விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்துச் சென்றனர் . இதில் பெருந்தலைவர் நெடுஞ்செழியன் கண்மணி அவர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர் பொதுமக்களும் தேரை இழுத்துச் சென்றனர் இதில் கழகப் பொதுச் செயலாளர் மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி வைத்துக்குப்பம் மீனவர்களை சந்தித்த இலங்கை தென்னிந்திய இணை தூதர் தொண்டைமான் கேஜீஸ்வரன்..



புதுச்சேரி, மார்ச்.31–

புதுச்சேரி வைத்துக்குப்பம் பகுதியில் உள்ள மீனவர்களை நேரில் சந்தித்து அவர்களது குறைகளை கேட்டறிய இலங்கை தென்னிந்திய இணை தூதர் தொண்டைமான் கேஜீஸ்வரன் அவர்கள் மேற்கொண்டார்.

இந்த சந்திப்பின் போது, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்தனர். குறிப்பாக, கடலில் வழி தவறும் மீனவர்களை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

மேலும், கடல்சார் பாதுகாப்பு, மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் எல்லை தொடர்பான சிக்கல்கள் குறித்து தீர்வு காண வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிகழ்வில் லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் மற்றும் ராஜ்பவன் தொகுதி பாஜக சட்டமன்ற வேட்பாளர் ராமலிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# குமாரபாளையம் திமுக வேட்பாளர் பாலு தீவிர தேர்தல் பிரச்சாரம்..

## திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளை சந்திப்பு ஆதரவு திரட்டினார்.

நாமக்கல். மார்ச் 31

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் கட்சியினர் தேர்தல் பணிகளின் தீவிரம் காட்டி வருகின்றனர்.



2026 சட்டமன்ற பொது தேர்தல் அடுத்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது.

இந்த தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியும், அதிமுக தலைமையிலான கூட்டணியின் தீவிரமாக தேர்தல் களத்தில் தேர்தல் பணிகளை தொடங்கியுள்ளனர்.

தொடர்ந்து நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றி கழகம், சுயேச்சைகள் என தங்கள் தொகுதியில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்து தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன. இந்த நிலையில் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு திமுக வேட்பாளராக எஸ். பாலுவை திமுக தலைமை அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து திமுக வேட்பாளர் எஸ். பாலு திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகளை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்.

தொடர்ந்து அவர் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

இதனை அடுத்து அதற்கான பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வதற்காக திமுக நிர்வாகிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## FORMAT-C-1

## DECLARATION ABOUT CRIMINAL CASES

As per the judgement dated 25*th* September, 2018 of Hon'ble Supreme Court in wp (civil) No. 536 of 2011

Name and address of candidate : **S. SHAKUL HAMED**
No 1. Main Road Pargoor
Puducherry.

Name of political party : Independent

Name of Election : Puducherry Assembly - 2026 General Election.

Name of constitvency : VILLIANUR

I. S.SHAKUL HAMED, a candidate for the above mentioned Election, declare for public information the following details about my Criminal Antecedents:

(A) Pending Criminal cases


| S1 NO | Name of court | Case No and dated | Status of care(s) | Section 10 of Acts concerned and brief description of Offence (s) |
|---|---|---|---|---|
| 1. | NIL | 30/2024<br>03.02.2024 | Case charged and same was yet to be taken court | v/s 509 IPC r/w.34 |





நெல்லித்தோப்பு சட்டமன்ற தொகுதிகள் சுயேச்சை வேட்பாளராக பலாப்பழம் சின்னத்தில் போட்டியிடும் திரு ஓம் சக்தி சேகர் அவர்கள் நேற்று 30326 திங்கள்கிழமை தொகுதிக்குட்பட்ட அண்ணா நகர் வார்டு DR நகர், திருமால் நகர், ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று பலாப்பழம் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அப்பகுதி மக்கள் சால்வை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் சிறப்பான வரவேற்பளித்தனர். மேலும் பல்வேறு கோரிக்கைகளை திரு ஓம் சக்தி சேகர் அவர்களிடம் முன்வைத்தனர். அப்போது அவர்களிடம் பேசிய இது ஓம் சக்தி சேகர் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளில் நமது தொகுதி மிகவும் பின்தங்கி போய் உள்ளது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த 2006 முதல் 2016 வரை இந்த பகுதிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை மேற்கொண்டேன். சுத்தமான குடிநீர் கிடைக்க அண்ணா நகர் பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்துக் கொடுத்தேன். டி ஆர் நகர் பகுதியில் அனைத்து சாலைகளையும் சிமெண்ட் சாலையாக மாற்றி கொடுத்தேன். திருமால் நகர் பகுதியில் அடிப்படை வசதிகளை மேற்கொண்டேன். திருமால் நகரில் அப்பகுதி மக்கள் தங்கள் பகுதியிலேயே கோயில் வேண்டும் என்று கேட்டு அதற்கு பிரச்சினை வந்தபோது கோயில் திருமால் நகரில் இருக்க உங்களோடு சேர்ந்து நடவடிக்கை எடுத்தேன். திருமால் நகர் மற்றும் டி ஆர் நகர் முழுவதும் கூடுதலாக சிசிடிவி கேமராக்கள் அமைத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன். என்னை வாக்களித்து வெற்றி பெற செய்த நெல்லித்தோப்பு தொகுதி மக்களின் நலன் ஒன்றை குறிக்கோளாக பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் செயல்படுவேன். இவ்வாறு அண்ணன் ஓம் சக்தி சேகர் அவர்கள் பேசினார்.

# கோவிந்தா கோஷத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்த பக்தர்கள்



வந்தவாசி, மார்ச் 31:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாயகி சமேத ரங்கநாதப் பெருமாள் கோவிலில் நேற்று பங்குனி மாத பிரம்மோற்சவ விழாவின் ஏழாவது நாள் தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கோவிந்தா கோவிந்தா என்ற கோஷத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். மேலும் ஆங்காங்கே பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் மோர் வழங்கப்பட்டது. முன்னதாக உற்சவ மூர்த்திகளுக்கு கோவிலில் விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.

## நாளை முதல் கட்டாயம்

# சுங்கச்சாவடிகளில் டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்கு மட்டுமே அனுமதி




திண்டுக்கல் திருச்சி சாலை பொன்னம்பலம்பட்டி சுங்கச்சாவடியில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகை.

மணப்பாறை,மார்ச்.31

தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளில் நாளை நள்ளிரவு முதல் டிஜிட்டல் பண பரிவர்த்தனை மூலம் மட்டுமே சுங்க கட்டணம் வசூலிக்க வேண்டும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 66 சுங்கச்சாவடிகள் இயங்கி வருகின்றன. இவ்வழியாக செல்லும் வாகனங்களிடம் ஆர்.எப்.ஐ.டி. தொழில்நுட்பம் மூலம் பாஸ்டேக் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. வாகன முகப்பு கண்ணாடியில் ஒட்டப்படும் இந்த ஸ்டிக்கர் சுங்கச்சாவடியில் உள்ள ஸ்கேனருடன் இணைக்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த ஸ்டிக்கர் ஒட்டாத வாகனங்கள் நேரடியாக கட்டணத்தை செலுத்தி வருகின்றனர்.

புதிய நடைமுறை

ஏப்ரல் 1ந் தேதி முதல் சுங்க கட்டணம் பாஸ்டேக் ஒட்டாத வாகனங்களிடம் வசூலிக்க கூடாது என சுங்கச்சாவடிகளுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி நாளை இரவு முதல் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் கட்டணம் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சுங்கச்சாவடி நிர்வாகிகள் கூறுகையில், அனைத்து தேசிய நெடுஞ்சாலை சுங்கச் சாவடிகளிலும் பே.டி.எம். மற்றும் என்.எச்.ஏ.ஐ. இணைய தளம் வழியாக கட்டணம் செலுத்தும் வசதி உள்ளது. ரூ.3000 செலுத்தினால் தனியார் கார்கள், ஜீப்களுக்கு ஓராண்டு அல்லது 200 பயணங்ளுக்கு கட்டணமின்றி அனுமதி வழங்கும் வசதியும் உள்ளது.

ஏப்ரல் 1ந் தேதி முதல் ஆன்லைன் டிஜிட்டல் பரிவர்த்தனையில் மட்டுமே கட்டணம் முடியும். இது குறித்து வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மதுரை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கொடைரோடு சுங்கச்சாவடி, திருச்சி திண்டுக்கல் சாலையில் உள்ள தங்கம்மாபட்டி சுங்கச்சாவடி உள்ளிட்ட இடங்களில் அறிவிப்பு பேனர் வைக்கப்பட்டுள்ளது என்றனர்.


# திண்டுக்கல் அருகே விதிகளை மீறி பட்டாசு வெடித்த 10 பேர் மீது வழக்கு.

திண்டுக்கல், மார்ச்.31

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராக டாக்டர் பரமசிவம் அறிவிக்க ப்பட்டார். இந்த நிலையில் வேடசந்தூர் வடமதுரை செல்லும் சாலையில் வேட்பாளருக்கு வரவேற்பு அளிப்பதற்காக அ.தி.மு.க.வினர் கூடினர். போக்குவரத்திற்கு இடையூறு செய்யும் வகையில் சாலையில் நடுவே நின்றதாக கூறப்படுகிறது.

அதனை தொடர்ந்து வடமதுரை சாலையில் இருந்து ஆத்துமேடு வரை ஏராளமானோர் நடுரோட்டில் பேரணியாக சென்றதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும்

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் சரவெடி பட்டாசுகளை வெடித்ததாக கூறப்படுகிறது. வேடசந்தூர் இன்ஸ்பெக்டர் கணேசமூர்த்தி கண்டித்தும் கேட்கவில்லை. அனுமதியின்றி பட்டாசுகள் வெடித்தல், அனுமதி இன்றி கூட்டம் கூடுதல், பொது மக்களுக்கு இடையூறு செய்தல் உள்ளிட்ட 4 உரிய பிரிவின் கீழ் வேட்பாளர் பரமசிவம், ஒன்றிய செயலாளர் ஜான்போஸ், பேரூர் செயலாளர் பாபுசேட் உள்ளிட்ட 10 பேர் மீது தேர்தல் அதிகாரி உத்தரவின் பேரில் வேடசந்தூர் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.




# வணிக,தொழில்துறை எல்பிஜி இணைப்புகளைப் பெறுவதற்கு Torrent Gas நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் மார்ச் 31 :

எல்பிஜி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசாங்கத்தால் வணிக எல்பிஜி ஒதுக்கீடு ஆரம்பத்தில் 20% ஆகக் குறைக்கப்பட்டது. இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு,தற்போது வணிக வாடிக்கையாளர் கள் நெருக்கடிக்கு முந்தைய அளவில் 70% வரை பெறத் தகுதி யுடையவர்கள் ஆவர். இருப்பினும் சில நிபந்தனைகளை வாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்தால் மட்டுமே, முழு 70% ஒதுக்கீட்டின் பலனைப் பெற முடியும்.

அனைத்து வணிக,தொழில்துறை எல்பிஜி நுகர்வோரும் கூடுதல் ஒதுக்கீட்டிலிருந்து எல்பிஜியைப் பெறுவதற்குத் தகுதி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களில் பதிவு செய்ய வேண்டும். மேலும், அத்தகைய எல்பிஜி நுகர்வோர், குழாய்வழி இயற்கை எரிவாயு இணைப்புகளுக்குப் பொருந்தும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள நகர எரிவாயு விநியோக நிறுவனத்தில் பதிவு செய்து, PNG பெறுவதற்கான தங்கள் தயார் நிலையை வெளிப்படுத்த வேண்டும். அனைத்து வணிக வாடிக்கையாளர்களும் மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இணங்கி, 70% ஒதுக்கீட்டின் பலனைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் விருப்பமுள்ள வணிக/தொழில்துறை எல்பிஜி இணைப்புகளைப் பெறுவதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள CGD நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு CGD நிறுவனம் : Torrent Gas கட்டணமில்லா தொடர்பு எண் : 1800 21256789,KSR பிரசாத், நிர்வாக இயக்குனர், Torrent Gas Chennai Pvt Ltd, CGD Network மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர். தொடர்பு எண்: +91 6357469742 தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

# அரியலூர் தேர்தல் செலவாக ஒரு நாளைக்கு 500 ரூபாய் போதும்



அரியலூர். மார்ச்.31–

பிச்சைக்காரன் மன நிலையுடன் மக்களுக்கு சேவையாற்ற தயாராக உள்ளேன் என நாடாளும் மக்கள் கட்சி அமைப்பின் சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்த தங்க சண்முகசுந்தரம் தெரிவித்தார்


அரியலூர் மாவட்டம் கீழக்காவட்டாங்குறிச்சி கிராமத்தை சேர்ந்தவர் தங்க சண்முகசுந்தரம். இயற்கை ஆர்வலரும் விவசாய கூட்டமைப்பை சேர்ந்தவருமான இவர் அரியலூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட முடிவு செய்தார் இதனை ஒட்டி வைப்பு தொகையாக கட்ட வேண்டிய ரூ10,000 பணத்தை கடந்த சில வாரங்களாக பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் யாசகம் பெற்று வந்தார் இந்நிலையில் வேட்பு மனு தாக்களின் முதல் நாளான இன்று முதல் நபராக தங்க சண்முகசுந்தரம் தனது வேட்பு மனுவை அரியலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் பிரேமிடம் வழங்கினார் ஒரு ரூபாய் அப்பொழுது பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் யாசகம் பெற்ற சில்லறை காசுகள் சில்லறை நோட்டுகள் ஆகியவற்றை கொடுத்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார் இதில் தனது சொத்து மதிப்பாக இரண்டு வீடு மற்றும் 2 அரை ஏக்கர் வயல் ஆகியவற்றை அசையா சொத்துகளை காட்டியுள்ளார்

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தங்கசண்முக சுந்தரம் நான் வைப்பத் தொகையாக பத்தாயிரம் ரூபாயை பொதுமக்களிடம் பிச்சை எடுத்து கட்டி உள்ளதை பெருமையாக கருதுகிறேன் பிச்சைக்காரன் அடுத்த வேலை சோற்றை பற்றி எண்ண மாட்டான் அதே மனநிலையுடன் நானும் மக்களுக்காக செயல்படுவேன். தேர்தல் செலவுக்காக எனக்கு ஒரு நாளைக்கு 500 ரூபாய் எனது இருசக்கர வாகன பெட்ரோலுக்குபோதுமானது மற்றபடி எனக்குஎந்தவிதமான செலவும் இல்லை. தனி ஆளாக தான் மக்களை சந்தித்து ஓட்டு கேட்க உள்ளேன் நான் அரியலூர் சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளை சட்டமன்றத்தில் எழுப்புவேன் என தன்னம்பிக்கையுடன் தெரிவித்தார்

# ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் சு. முத்துசாமிக்கு சிறப்பான வரவேற்பு..

## தலைவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை..





ஈரோடு. மார்ச். 31

ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின் ஈரோடு வந்த அமைச்சர் முத்துசாமிக்கு கட்சியினர் சிறப்பாக வரவேற்பு அளித்தனர்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 அடுத்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்ற நிலையில் தமிழகத்தில் அரசியல் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தீவிர தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுக கூட்டணி மற்றும் அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றி கழகம் என அரசியல் கட்சிகள் தங்களின் கட்சிகளின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் அடிப்படையில், திமுக வேட்பாளராக ஈரோடு மேற்கு தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சர் சு. முத்துசாமி நேற்று முன்தினம் மாலை 6 மணி அளவில் ஈரோடு வருகை தந்தார்.


அவருக்கு திமுகவினர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு வழங்கினர்.

முன்னதாக ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து அமைச்சர் முத்துசாமி மரியாதை செய்து வணங்கினார்.

# மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி

திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் **பூங்கொடி சா. செந்தில்நாதன்** அவர்களின்

## சுய விபர குறிப்புகள்.



சொந்த ஊர்: மொடக்குறிச்சி ஒன்றியம், திருமங்கலம்
பிறந்த வருடம்: 09.07.1974 (வயது 51)
கல்வி தகுதி பொறியியல் பட்டதாரி
தகப்பனார் பெயர் பூங்கொடி மு. சாமிநாதன்
தாயார் பெயர் சா. பார்வதி
உடன் பிறந்தவர்கள் சா. இராதா,
கணவர் பெயர் D. செந்தில்குமார்,
நிர்வாக இயக்குநர், RD குழுமங்கள், ஈரோடு
மனைவி பெயர் செ. ஆனந்தி
குழந்தைகள் மிதுல் கிருத்திக் என்ற மகன் உள்ளார்.

கழகத்தில் வகித்து வந்த பொறுப்பு: அரசியல் ஆய்வு மய்ய உறுப்பினர்

தொழில்: விவசாயம், தேங்காய் நார் பித்து ஏற்றுமதி. * உரிமையாளர் ரீஜென்சி தங்கும் விடுதி, மேட்டூர் சாலை, ஈரோடு. பங்குதாரர் அனிச்சம் ஜூவல்லரி, மேட்டூர் சாலை, ஈரோடு.

கொங்கு வேளாளர் கவுண்டர்

தொழில் சார்ந்த முகவரி மற்றும் முகாம் அலுவலகம்: S.S. Coir,

கதவு எண். 158/159, நாகமலைத் தோட்டம், அ.அனுமன்பள்ளி, அரச்சலூர், ஈரோடு– 638 101

இல்ல முகவரி: கதவு எண். 10, பவளம் வீதி, முனிசிபல் காலனி, ஈரோடு நகரம்.

அலைபேசி எண்.: 98427 32655

வேட்பாளின் தகப்பனார் பூங்கொடி மு. சாமிநாதன் அவர்கள், 1972ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிரமாக பணியாற்றி வந்தவர். 1993ஆம் ஆண்டு ஈரோடு நகர திராவிட முன்னேற்ற கழக செயலாளராக பணியாற்றி வந்த திரு. பூங்கொடி மு. சாமிநாதன், ஈரோடு நகராட்சியில் நகர் மன்ற உறுப்பினராக பணிபுரிந்து வந்துள்ளார். 1994ஆம் ஆண்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் உருவானபோது திரு. வைகோ அவர்கள் தலைமமையில் தன்னை கட்சியில் இணைத்துக் கொண்டார்.

1994ஆம் ஆண்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்த திரு. பூங்கொடி சா. செந்தில்நாதன் அது நாள் முதல், கழக பொதுச் செயலாளர் திரு. வைகோ மற்றும் திரு. துரைவைகோ அவர்கள் தலைமையில் தீவிர அரசியல் பணியாற்றி வருகிறார். இவரது குடும்பம் பாரம்பரியமிக்க திராவிட முன்னேற்ற கழக குடும்பம் ஆகும்.

பூங்கொடி மு. சாமிநாதன் அவர்கள், திராவிட முன்னேற்ற கழகத்தில் பணியாற்றி வந்த போது, ஈரோடு முனிசிபல் காலனியில் அவர் வாங்கி திராவிட முன்னேற்ற கழகத்திற்கு அளித்த இடத்தில தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவச் சிலை, அவரின் மறைவுக்கு பின்னர் முதன் முதலாக கட்டிடம் கட்டி திறப்பட்டது.

ஈரோடு மாவட்ட திராவிட முன்னேற்ற கழக அலுவலகம் அமைந்துள்ள இடத்தை வாங்குவதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் அ.கணேசமூர்த்தி அவர்களுடன் இணைந்து, பெரும்பங்காற்றியவர் திரு. பூங்கொடி மு. சாமிநாதன் ஆவார்.

32 ஆண்டு காலமாக தலைமைக்கு விசுவாசம், அப்பழுக்கற்ற அரசியல் பணி இவரின் தனிச்சிறப்பு.

# மாட்டு வண்டியில் வந்து வேட்பு மனு தாக்கல் செய்த நா த க வேட்பாளர்.

## விறுவிறுப்பு இன்றி தொடங்கிய முதல் நாள் வேட்பு மனு தாக்கல்..



ஈரோடு. மார்ச் 31

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலுக்கான முதல் நாள் வேட்பு மனு தாக்கல் விறுவிறுப்பு இன்றி முந்தமாக இருந்தது.

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிக்கான சட்டமன்ற பொது தேர்தல் 2026, வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது.

இதற்காக தமிழக அரசியல் கட்சிகள் கூட்டணிகள் அமைத்து வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் காலத்தில் இறங்கி உள்ளது.

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு மற்றும் மேற்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வேட்பா மனு தாக்கல் நேற்று தொடங்கியது.

வேட்பு மனுவை ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான ஆர்பித் ஜெயின் வேட்பு மனுக்களை வாங்கினார்.

இதில் ஈரோடு மேற்கு தொகுதி நாம் தமிழர் கட்சியின் சார்பில் வேட்பாளர் விஜய் என்பவர் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார். இவருக்கு மாற்று வேட்பாளராக ஹரிஹரன் என்பவரும் வேட்பமும் தாக்கல் செய்தார்.

இவர்கள் இருவரும் மாட்டு வண்டியில் வந்து வேட்பு மனு தாக்கல் செய்தது சற்று வித்தியாசமாக இருந்தது.

மேலும் நேற்றைய முதல் நாள் வேட்பு மனு தாக்களின் போது நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உட்பட சுயேச்சைகள் என மொத்தம் ஐந்து பேர் தங்களின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

வேட்புமனை தாக்களின் முதல் நாள் என்பதால் நேற்றைய வேட்பு மனு தாக்கல் சுறுசுறுப்பு இன்றி மந்தமாக காணப் பட்டது.

அரசியல் கட்சிகள் வேட்பு மனு தாக்கல் செய்வதை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி வளாகத்தில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# சேலம், மேட்டூரில் தேர்தல் மன்னன் பத்மராஜன்

## 253 ஆவது முறையாக வேட்புமனு.


மகாபிரபு இங்கேயும் 253 ஆவது முறையாக வந்துட்டீங்களா? மேட்டூரில் தேர்தல் மன்னன் பத்மராஜன் வேட்புமனு

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டசபை தொகுதியில் சுயேச்சையாக களமிறங்க பத்மராஜன் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார் இவர் இதுவரை 252 தேர்தல்களில் போட்டியிட்டு தற்போது 253 ஆவது முறையாக தேர்தலில் போட்டியிடுகிறார்.

தமிழகத் தேர்தல் களத்தில் தவிர்க்க முடியாத ஒரு பெயராக மாறிப்போனவர் சேலம் மாவட்டம் மேட்டூரைச் சேர்ந்த ‘தேர்தல் மன்னன்’ என்று அழைக்கப்படும் டாக்டர் கே. பத்மராஜன். 1988ஆம் ஆண்டு முதல் இன்று வரை, அதாவது 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, சுமார் 38 ஆண்டு காலமாகத் தொடர்ந்து 252 தேர்தல்களில் போட்டியிட்டு வரும் இவருடைய அரசியல் பயணம் மிகவும் சுவாரஸ்யமானது.

ஒரு சாதாரண டயர் ரீட்ரேடிங் கடை வைத்திருக்கும் இவர், தனது தோல்விகளையே சாதனைகளாக மாற்றி கின்னஸ் உலக சாதனை மற்றும் லிம்கா புத்தகத்தில் ‘உலகின் அதிக முறை தோல்வியுற்ற வேட்பாளர்’ என்ற இடத்தைப் பிடித்துள்ளார்.

பத்மராஜன் இதுவரை 252க்கும் மேற்பட்ட தேர்தல்களில் போட்டியிட்டுள்ளார். இதில் பஞ் சாயத்துத் தேர்தல் முதல் குடியரசுத் தலைவர் தேர்தல் வரை அனைத்து நிலைகளிலும் அவர் களம்



கண்டுள்ளார். குறிப்பாக 6 முறை குடியரசுத் தலைவர் தேர்தல், 6 முறை குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல், 32 முறை மக்களவைத் தேர்தல் மற்றும் 50க்கும் மேற்பட்ட மாநிலங்களவைத் தேர்தல்களில் அவர் போட்டியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.பி. நட்டா, நரேந்திர மோடி, ஜெயலலிதா, கருணாநிதி, வாஜ்பாய், மன்மோகன் சிங் மற்றும் ராகுல் காந்தி போன்ற இந்திய அரசியலின் ஜாம்பவான்களை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரே சுயேச்சை வேட்பாளர் இவர்தான்.

பொருளாதார ரீதியாகப் பார்த்தால், கடந்த 30 ஆண்டுகளில் தனது தேர்தல் செலவுகளுக்காக அவர் சுமார் 1 கோடி ரூபாய்க்கும் மேல் செலவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு தேர்தலுக்கும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ,வேட்புமனு தாக்கல் செய்ய பல்வேறு மாநிலங்களுக்குச் செல்லும் பயணச் செலவு என அனைத்தையும் தனது டயர் கடை வருமானத்திலிருந்தே அவர் ஈடுகட்டுகிறார்.

இதுவரை அவர் செலுத்திய வைப்புத் தொகையில் ஒருமுறை கூட அது அவருக்குத் திரும்பக் கிடைத்ததில்லை (வைப்புத் தொகை திரும்பப் பெற குறைந்தபட்ச வாக்குகளை அவர் பெற்றதில்லை). 2011ஆம் ஆண்டு மேட்டூர் தொகுதியில் அவர் பெற்ற 6,273 வாக்குகளே அவர் இதுவரை பெற்ற அதிகபட்ச வாக்குகளாகும்.

தற்போது நடைபெறவுள்ள 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தனது வழக்கமான பாணியில் வேட்புமனு தாக்கல் செய்துள்ள பத்மராஜன், “வெற்றி பெறுவது எனது நோக்கமல்ல, சாதாரண சாமானியனும் நாட்டின் மிக உயர்ந்த பதவிக்கு போட்டியிட முடியும் என்பதை நிரூபிப்பதே எனது லட்சியம்“ என்று கூறுகிறார்.

மக்கள் தனக்கு வாக்களிக்கக் கூடாது என்றும், தோல்விதான் தனது இலக்கு என்றும் அவர் வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்வது இவருக்கே உரித்தான தனித்துவம். தோல்விகளைத் கண்டு துவண்டு போகும் இளைஞர்களுக்கு மத்தியில், விடாமுயற்சிக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்பதே இவருடைய ஒட்டுமொத்த அரசியல் பயணத்தின் சாராம்சமாகும்.

# திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் 3வது முறையாக போட்டியிடும் வேட்பாளர் “வி.ஜி.ராஜேந்திரன் தொடரட்டும் திருவள்ளூர் வளரட்டும்” என்ற கோஷத்துடன் திமுக நிர்வாக்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாக்கள் தீவிர வாக்கு சேகரிப்பு :



திருவள்ளூர் மார்ச் 31 : திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் வி.ஜி. ராஜேந்திரன் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. திமுக தலைமை செயற் குழு உறுப்பினரான இவர் கடந்த 2016 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வேட்பாளரை விட 5138 வாக்குகள் வித்தியாசத்திலும், 2021 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வேட்பாளரை விட 22701 வாக்குகள் வித்தியாசத்திலும் தோற்கடித்து வெற்றி பெற்று சாதனை படைத்தார்.

இதனையடுத்து 3வது முறையாக திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டதையடுத்து நேற்று திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணவாள நகரில் கடம்பத்தூர் ஒன்றிய திமுக நிர்வாகிகள் ஏற்பாட்டில் இந்திரா காந்தி சிலைக்கும், ஆயில்மில் பகுதியில் திருவள்ளூர் நகர திமுக சார்பில் டாக்டர் அம்பேத்கர் சிலைக்கும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் பேரணியாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து ஜே.என். சாலை, ராஜாஜி சாலை, வீரராகவர் கோயில் குளம் வழியாக பேரணியாக திறந்த ஜீப்பில் ஊர்வலமாக சென்று பொது மக்களிடம் திமுகவின் சாதனைகளை எடுத்துச் சொல்லி வாக்கு சேகரித்தார். திமுக தலைமையில் 7வது முறையும், மு.க.ஸ்டாலின் தலைமையில் 2வது முறையும் ஆட்சி அமைய 3 வது முறையாக போட்டியிடும் தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி வாக்கு சேகரித்தார். அதனைத் தொடர்ந்து சிவிஎன் சாலையில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதனையடுத்து வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் சசிகுமார் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்து ஆதரவு திரட்டினார். 3வது முறையாகபோட்டியிடும் வேட்பாளர் “வி.ஜி.ராஜேந்திரன் தொடரட்டும் திருவள்ளூர் வளரட்டும்“ என்ற கோஷத்துடன் திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் கொண்டஞ்சேரி ரமேஷ், மகாலிங்கம் , கூளூர் ராஜேந்திரன், அரிகிருஷ்ணன், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன் பாண்டியன் , நிர்வாகிகள் காஞ் சிப்பாடி சரவணன், தா.மோதிலால், தீலீபன், வழக்கறிஞர் எஸ்.கே. ஆதாம், மகளிர் அணி நிர்வாகிகள் சரஸ்வதி சந்திரசேகர் சித்ரா ரமேஷ் உள்ளிட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.




# நான்கு லட்சம் கடனுக்கு மீட்டர் வட்டி போட்டு 22 லட்சம் கேட்டு மிரட்டும் நபரிடமிருந்து பாதுகாப்பு பாதிக்கப்பட்ட பெண் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தார்.

திருப்பூர் மார்ச்31

திருப்பூர் கணக்கம்பாளையம் பிரிவு பிள்ளையார் கோவில் வீதி பகுதியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் 75 இவரது மனைவி மகேஸ்வரி மற்றும் மகன் குமரேசன் உடன் வாழ்ந்து வந்தார். மகன் குமரேசன் கடந்தாண்டு உயிரிழந்த நிலையில் ஏழு வருடங்களுக்கு முன்பு ஆறுமுகம் இதய பிரச்சினைக்காக மருத்துவ செலவுக்கு எம்மாம்பூண்டியைச் சேர்ந்த பொன்னுச்சாமி என்பவர் இடம் நான்கு லட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளனர். இதற்காக ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து வட்டி செலுத்தி வந்த நிலையில் கடந்த ஓராண்டாக மருத்துவ செலவு அதிகரித்த நிலையில் வட்டி தொகையை கொடுக்க முடியாமல் போனதாகவும் இதனால் பொன்னுச்சாமி நேரடியாக வீட்டுக்கு வந்து கடும் சொற்களால் திட்டி மன உளைச்சல் ஏற்படுத்தி வருவதாகவும் மேலும் 4 லட்சம் ரூபாய் கடனுக்கு மீட்டர் வட்டி போட்டு 22 லட்சம் ரூபாய் கேட்டு தங்களுக்கு மிரட்டல் விடுத்து வருவதால்




அச்சமான சூழல் நிலவுவதாகவும் பொன்னுசாமி இடமிருந்து தங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் எனவும் வீட்டை விற்று அசல் தொகை 4 லட்சம் ரூபாய் கொடுக்க முன்வந்தும் அவர் அதனை வாங்காமல். தங்களை மிரட்டுவதால் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினர் தங்களுக்கு பாதுகாப்பு வழங்கி நீதி பெற்று தர வேண்டும் என கோரிக்கை விடுத்து பாதிக்கப்பட்ட மகேஸ்வரி மற்றும் அவரது உறவினர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421